திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, ரஷ்ய டிராக்டர்களை விட நமது நாட்டில் உற்பத்தியாகும் டிராக்டர்கள் மிக உபயோககரமாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். எனவே, நமது நாட்டில் உற்பத்தியாகும் டிராக்டர்களையே பாபுலரைஸ் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, நமது நாட்டு டிராக்டர்களும் வாங்கப்படுகின்றன. ஆனால், இதை வாங்க மத்திய அரசின் அனுமதி தேவைப்படுகிறது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, டிராக்டர் விலை யெல்லாம் 40 ஆயிரம், 50 ஆயிரம் என்று ஏறிவிட்டது. மத்திய சர்க்காருக்கு இதை எடுத்துச் சொல்லி போடப்படுகிற வரிகளைக் குறைக்க அரசு முன்வருமா? டிராக்டர்களின் விலையைக் குறைக்க அரசு கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, டிராக்டர்களின் விலை ஏதும் ஏறவில்லை. போடப்படுகின்ற சர் சார்ஜ் தான் ஏற்றப்பட்டிருக்கிறது. ஆகவே தான் விலை உயர்ந் திருப்பதாக தெரிகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, நமது நாட்டில் உற்பத்தியாகிற டிராக்டர்கள் 35 பரித்திறன் உடையவை. 30 பரித் திறன் டிராக்டர் கூட 30 ஆயிரம் ரூபாய் விலை விற்கிறது. இருந்தும் இவை தரத்தில் சிறந்தனவாக இல்லை என்று சொல்லி, வாங்குகிற வர்கள் எல்லாம் இவை வேண்டாம், வெளி நாட்டு டிராக்டர்கள் தான் வேண்டும் என்று கேட்கிறார்கள். நம் நாட்டில் உற்பத்தி ஆகும் டிராக்டர்களின் தரம் குறைந்திருக்கக் காரணம் என்ன? அதை அரசு அறிய முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, நமது நாட்டில் தயாராகும் டிராக்டர்கள் தரம் பற்றிய சந்தேகம் இருந்து கொண்டு தான் இருக்கிறது. ஆனால், நமது நாட்டில் தயாரிக்கப்படும் டிராக்டர்கள் மிகச் சிறந்த தரத்தை உடையவை. எல்லோராலும் பாராட்டப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவில்பட்டியில் பருத்தி சாகுபடி.

*382 வினா—**திரு. எம். முத்தையா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டியில் பருத்தி அபிவிருத்தி சாகுபடித் திட்டத்தின் கீழ் 1970-71-ம் ஆண்டில் செலவான தொகை என்ன?

(இ) அதன் மூலம் வரவு எவ்வளவு?

[1971 டிசம்பர் 14

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கோவில்பட்டியில் பருத்தி அபிவிருத்தி சாகுபடித் திட்டத்தின் கிழ் 1970-71 ஆண்டில் ரூ. 1,06,326.53 செலவு செய்யப்பட்டது.

(இ) இத்திட்டம் ஒரு சேவை புரியும் திட்டமாகும். இத் திட்டத்தின் மூலம் பருத்தி விவசாயிகள் மானுவாரி பகுதியில் சிறந்தவகைப் பருத்தியை உற்பத்தி செய்யவும், திருந்திய சாகுபடி திட்டத்தைக் கடைப்பிடிக்கவும், நாட்டின் உற்பத்திக்கும் தேவைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நீக்கவும், ஒவ்வொரு ஏக்காரவிலும் அதிக விளைச்சலை உண்டாக்கவும் சேவை செய்யப்பட்டு வருகிறது. எனவே இத் திட்டத்தின் மூலம் அரசுக்கு வரவு எதும் இல்லை.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின் கிழ் எத்தனை வகைப் பருத்திகள் இருக்கின்றன? அதில் எது உயர்ந்த ரகம்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இது பற்றி ஆராய்ச்சி தான் நடந்துகொண்டிருக்கிறது. ஆராய்ச்சி முடிவடைந்து முழு விவரங்கள் கிடைத்தவுடன் இதைச் சொல்ல முடியும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, பருத்தி ஆராய்ச்சிச் செய்வதாகச் சொன்னார்கள். இதில் கலர்ப் பருத்தி உற்பத்திச் செய்ய முயற்சி செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

New variety of mangoes

* 383 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a new variety of mango has been evolved as a result of cross between the Madras Neelam and Lucknow Desehri; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) புது டில்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தில் நீலம், தாசரி இவற்றுக்கிடையே ஒட்டு செய்ததன் விளைவாகப் புதியவகை மாஞ்செடி ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. "சென்னை நீலம்" என்றோ "லக்னோ தாசரி" என்றோ பெயருடைய வகைகள் எவையும் இல்லை; மாறாக "நீலம்" "தாசரி" என்ற வகைகள் மட்டுமேயுள்ளன. புதுடில்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மாஞ்செடி ஒட்டு ஆராய்ச்சிப்